Deposition of Witness Page.No.
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE KATPADI

Case No CC.44/2022

Deposition of Witness for PW1

Name : செல்வி பிரியதர்ஷினி

Husband's Name : அழகிரி

Village : கல்புதூர்

Occupation : தனியார் மருத்துவமனை

Age : 39

Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w rule 35,36 of Criminal rules of practice 2019. 26.12.2022

---

<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>

<u>முதல் விசாரணை:</u>

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சிம்சி மருத்துவமனையில் வேலை செய்து வருகிறேன். நான் இவ்வழக்கில் புகார்த்தாரர் ஆவேன். வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நான் எனது தரப்பு முதன்மை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். 20.09.2019 தேதியிட்ட எதிரி புகார்தாரருக்கு எழுதி கொடுத்த கடனுறுதி சிட்டு ம.சா.ஆ.1 ஆகவும், 14.02.2022 ஆம் தேதியிட்ட அசல் காசோலை எண் 248623 ம.சா.ஆ. 2 ஆகவும், 22.02.2022 தேதியிட்ட மேற்படி காசோலை திரும்பியதற்கான குறிப்பாணை ம.சா.ஆ. 3 ஆகவும், 09.03.2022 தேதியிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.சா.ஆ. 4 ஆகவும், ஒப்புகை அட்டை ம.சா.ஆ. 5 ஆகவும், 23.03.2022 தேதியிட்ட எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.6 ஆகவும், 18.03.2022 தேதியிட்ட மேற்படி காசோலை திரும்பியதற்கான குறிப்பாணை ம.சா.ஆ. 7 ஆகவும், 25.03.2022 தேதியிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.சா.ஆ. 8 ஆகவும், 26.03.2022 தேதியிட்ட ஒப்புகை அட்டை ம.சா.ஆ.9 ஆகவும், 07.04.2022 தேதியிட் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு மசா.ஆ.10 ஆகவும் ஏற்கனவே வழக்கு கோப்பிற்கு எடுப்பதற்கு முன்பாக குறியீடு செய்யப்பட்டுவிட்டதால் அவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக இவ்வழக்கில் எடுத்துக்கொள்ள வேண்டப்படுகிறது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : ஒத்திவைக்கப்படுகிறது.

J JAYGANESH Digitally signed by J JAYGANESH